தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 10-11-2017

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## இளஞ்சிவப்பு காய்ப்புழு மேலாண்மை விழிப்புணர்வு முகாம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும் வேளாண்மைத் துறையும் இணைந்து பருத்தி பயிர் பாதுகாப்பு முறைகளை குறிப்பாக இளஞ்சிவப்பு காய்ப்புழு மேலாண்மை தொழில் நுட்பங்களை விவசாயிகளின் நலனுக்காக எடுத்துரைக்க பெரம்பலூர் ஸ்ரீ பூமனம் திருமண மஹாலில் 14-11-2017 அன்று 10 மணி அளவில் விழிப்புணர்வு முகாமினை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் பல்கலைக்கழக துணைவேந்தரும் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரும் அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர்களும் சிறப்புரை ஆற்ற உள்ளனர். மேலும், பருத்தி சாகுபடி தொழில் நுட்பங்களை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சம்பந்தப்பட்ட வல்லுனர்கள் விளக்கவுள்ளனர்.

அனைத்து விவசாயிகளும் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த விழிப்புணர்வு கூட்டத்தினை ராசி விதை நிறுவனத்தின் உதவியுடன் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மக்கள் தொடர்பு அலுவலர்